கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

**முன்னிலை திருமதி. ப. சிவரஞ்ஜினி, B.Sc.,LL.M.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

அருப்புக்கோட்டை.

2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 17 ஆம் நாள் புதன்கிழமை

**வழக்கிடை மனு எண்.4/2026**

**உள்**

**அசல் வழக்கு எண்.82/2024**

----

1 செந்தூர்கனி

2. மாரிமுத்து

3. சோனையன்

(மேற்படி வாதிகள் தங்களுக்காகவும் R. கல்லுமடம் கிராமத்தில் உள்ள அம்பேத்கர் காலனி இந்து அருந்ததியர்களுக்கு பாத்தியப்பட்ட கன்னியம்மாள் கோவிலை வழிபட்டு வருகின்ற இந்து அருந்ததியர்களின் பங்காளிகள் ஸ்தானத்திலும்)

-- மனுதாரர்கள் / வாதிகள்

-எதிரிடை-

1. அந்தோணி

2. கண்மனி (எ) பாக்கியலட்சுமி

3. அமிர்தராஜ்

4. மேரி

5. கன்னியம்மாள் (எ) கன்னிமரியாள்

6. வட்டாட்சியர்-அருப்புக்கோட்டை

..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 21.01.2026 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 16.06.2026 ம் தேதியன்று இந்த நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.கார்கிசெல்வம் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5 ம் எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 ம் பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், 6 ம் எதிர்மனுதாரர்/6 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர்

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.06.17 17:07:57 +0530

திரு.C.தங்கப்பாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும் இருந்த நிலையில், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்காக இருந்து வந்த இம்மனுவினை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்...

**உத்தரவு**

அசல்வழக்கின் தபசில் சொத்தானது பூமியில் அமைந்துள்ள விதம் பற்றியும், அதன் இயற்கை அமைப்பு பற்றியும், அதன் விஸ்தீரணம் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக அதனை பார்வையிட்டும், வருவாய் துறையினர் உதவியுடன் தபசில் சொத்தினை அளவிட்டும், அறிக்கை செய்வதற்கு ஏதுவாக வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்ய உத்தரவிட வேண்டி, மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவானது உ.வி.மு.ச. கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**: –

(1) நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்து, விசாரணைக்காக வேண்டி வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், தபசில் சொத்தில் மனுதாரர்களும், அவர்களது சமூகத்தினை சேர்ந்த முன்னோர்களும் சுமார் 70 வது வருடங்களுக்கு மேலாக மண்பீடத்தினாலான கன்னியம்மாள் கோவிலை கட்டி வணங்கி வருவதாகவும், இந்நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் அவ்வாறு கன்னியம்மாள் கோவில் என்று எதுவும் இல்லை என்றும், மண்குவியல் என்றும் கட்சி செய்து வருவதாகவும், ஆனால் மேற்படி மண்குவியல் எதுவும் தபசில் சொத்தில் இல்லை என்றும், மேற்படி விபரமானது தபசில் சொத்தினை பார்வையிடும் பட்சத்தில் நீதிமன்றத்திற்கு தெளிவாக தெரிய வரும் என்றும், தபசில் சொத்தானது பூமியில் அமைந்துள்ள விதம் பற்றியும், அதன் இயற்கை அமைப்பு பற்றியும், அதன் விஸ்தீரணம் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக அதனை பார்வையிட்டும், வருவாய் துறையினர் உதவியுடன் தபசில் சொத்தினை அளவிட்டும், அறிக்கை செய்வதற்கு ஏதுவாக வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்ய தகுந்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல்.

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.06.17 17:08:03 +0530

3. 6ம் எதிர்மனுதாரர்/6ம் பிரதிவாதி தரப்பில் மறுப்புரை இல்லை என்று மேலொப்பம் செய்யப்பட்டது.

4. <u>பிரச்சினை : –</u>

**இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா ? என்பதே ஆகும்,**

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள்/வாதிகளின் பிராது, மனு மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் எதிர்வழக்குரைகள் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படவில்லை. இருதரப்பிலும் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. வழக்குக் கோப்பை பரிசீலிக்கையில், தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், தபசில் சொத்தானது பூமியில் அமைந்துள்ள விதம் பற்றியும், அதன் இயற்கை அமைப்பு பற்றியும், அதன் விஸ்தீரணம் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்ய உத்தரவிட வேண்டி, மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

7 மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், தபசில் சொத்தில் மனுதாரர்கள்/வாதிகளும், அவர்களது சமூகத்தினை சேர்ந்த முன்னோர்களும் சுமார் 70 வது வருடங்களுக்கு மேலாக மண்பீடத்தினாலான கன்னியம்மாள் கோவிலை கட்டி வணங்கி வருகிறார்கள் என்றும், பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கன்னியம்மாள் கோவில் என்று எதுவும் இல்லை என்றும், மண்குவியல் என்று கட்சி செய்து வருகிறார்கள் என்றும், ஆனால் மேற்படி மண்குவியல் எதுவும் தபசில் சொத்தில் இல்லை என்றும், மேற்படி விபரமானது தபசில் சொத்தினை பார்வையிடும் பட்சத்தில் நீதிமன்றத்திற்கு தெளிவாக தெரிய வரும் என்றும், நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்யவேண்டியது அவசியம் என்றும் வாதிட்டார்.

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.06.17 17:08:07 +0530

8. மனுதாரர்கள்/வாதிகள் அவர்களது மனுவில், தாவா சொத்தில் 70 வருடங்களுக்கு மேலாக மண்பீடத்தினாலான கன்னியம்மாள் கோவில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். மாறாக, 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை பரிசீலிக்கையில், மனுதாரர்கள்/வாதிகள் தாவா சொத்தான சர்வே எண்.25/12ன் வடகிழக்கு மூலையில் சர்வே எண்.25/11 சொத்தினை ஒட்டிவாறு ஒரு மண் குவியலை ஏற்படுத்தி கன்னியம்மாள் கோவில் என்று பொய்யாக பிரசுரம் செய்து மனுதாரர்கள்/வாதிகள் வழிபாடு நடத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்கள். மேற்படி மனுதாரர்கள்/வாதிகளின் மனு, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் எதிர்வழக்குரைகளை பரிசீலிக்கையில், தாவா சொத்தில் மண்ணாலான அமைப்பு ஒன்று உள்ளது என்பது தெளிவாக தெரியவருகிறது. மேலும், இருதரப்பிலும் தாவா சொத்தின் விஸ்தீரணம், அமைவிடம் ஆகியவை குறித்து பூசல் இருப்பதாக எடுத்துரைக்கவில்லை. ஆக, தாவா சொத்தின் இயற்கை அமைப்பு, விஸ்தீரணம், அமைவிடம், ஆகியவை குறித்து எவ்வித பிரச்சனையும் இவ்வழக்கில் இல்லை என்பது தெளிவாக தெரியவருகிறது. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், தாவா சொத்திலுள்ள மண் அமைப்பினை மனுதாரர்கள்/வாதிகள் வழிபாடு என்ற முறையில் அனுபவம் செய்து வருகிறார்களா ? இல்லையா ? என்பதேயாகும். தாவா சொத்தின் அனுபவம் குறித்து கண்டறிவதற்கு வழக்கிறஞர்/ஆணையர் நியமனம் கோர இயலாது என்பது தான் சட்டநிலையாகும். தாவா சொத்தின் அனுபவத்தை இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களின் அடிப்படையிலும், இருதரப்பிலும் அளிக்கப்படும் வாய்மொழி சாட்சியங்களின் அடிப்படையிலும் கண்டறியலாம் என்றும், இவ்வழக்கில் வழக்கறிஞர்/ஆணையரை நியமனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரர்கள்/வாதிகளின் இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.06.17 17:08:12 +0530

மேற்படி, உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 17 ம் நாள் பகரப்பட்டது.

SIVARANJINI P Digitally signed by SIVARANJINI P Date: 2026.06.17 17:08:18 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :– இல்லை

<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : </u>– இல்லை

SIVARANJINI P Digitally signed by SIVARANJINI P Date: 2026.06.17 17:08:23 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

-----------------------------------
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை.
இடைநிலைமனு எண்.4/2026
உள்
அ.வ.எண்.82/2024
சீரான/வரைவு உத்தரவு
நாள் –17.06.2026
------------------------------------